204

கடவுள் துணை.

மேலூர் ஸ்ரீமான் ஏ. ந வ.
முஹையதின் அப்துல் காதிறு அவர்களால் பாடிய

# நல்லுபதேச
# பலவர்ண மஞ்சரி.

(முதற் பாகம்) (2-வது பதிப்பு)

(1) விருத்தம்.

பத்தி யில்லாப் பாமரர்கள் பணத்தைத் தேடி
பாட்டத்துத் தமைப் பயிந்த தாயார் தந்தை
ஒத்துழைப்போ ருடன் பிறந்தோர்ப் பெண்டு பிள்ளை
ஒண்டி நின்றுத் திகையாதுக் கட்டிக்காத்து
சத்தியத்தை மெய்யெனவே சாரப்பெற்று
சாத்மீக வழியதனிற் சளயாதென்றும்
புத்திமிகு நல்லுபதேச மஞ்சரி யிதைப்
போற்றி செய்துளத்தன்பு புகட்டுவோமே.

(2) பி[illegible] பஞ்சாயத்தாருக்குபதேசித்த
நல்லுபதேச புது லாவணிப்பாட்டு.

பாழான காயத்தை நம்பித் துள்ளலாமா—வயிர்
பசித்து வந்தோரைத்துன்பம் செய்யலாமா—விழும்
பழுத்தோலே பதைக்கண்டு குருத்தோலே சிரித்திடப்
பக்குவத்தாலே நமனை வெல்லப் போமா (பாழா) 1
பாவியென்றும் பேரெடுத் திருப்பதாமா—வெகு
பாடுபட்ட சொத்து நமன் கூடப்போமா—பெரும்
பள்ளமுள்ள விடத்திலேயே தண்ணீர் நிறைந்திடும்—மற்ற
பனிப்பெருக்காலே கப்ப லோட்டப்போமா (பாழா) 2
பாம்புங்கீரியாக நா மிருக்கலாமா—கூலி
பாடுபடாதவன் கச்சிக் கட்டலாமா—சொந்தப்
பங்காளி குடிகெடுக்க வெங்காயத்தைப் போடச் சொல்லிப்
பனைக்கீழிருந்தும்பால் குடிக்கலாமா (பாழா) 3

ரிஜிஸ்டர் காபிரைட்] 1—3—28. [இதன் விலை அணா 2

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 APR 1928
960
397

உண்டவீட்டிற்கு ரெண்டகம் பண்ணலாமா—சிறு
உழக்கிற் கிழக்குமேற் களக்கலாமா—கேளும்
உட்சுவ ரிருக்கப்பின்பு புரச்சுவரும் பூசலாமா
உரலில் தலையிட்டுப்பின் வாங்கலாமா (பாழா) 4

ஊருண்மைக்குப் பேயாய்ப் பறக்கலாமா—பேசா
ஊமையன் கண்டகனா உரைக்கப்போமா—நல்ல
ஊரைப்பார்க்கச் சொன்னால் பறைச்சேரியைப் பார்த்துப்-பின்
ஊர்க்குருவி மேலம்பைத் தொடுப்பதாமா (பாழா) 5

இட்டத்திற்கு மேலோராசைப் படலாமா—சொல்
இருப்புத் தூணைக் கரையான் தின்னப் போமா—ஐயா
இரக்கமில்லாத நெஞ்சு இரும்பினுங் கொடியது
இறவல் சதமென்றெண்ணி இருக்கலாமா (பாழா) 6

எரிநெருப்பி லெண்ணையை விடலாமா—காணில்
எட்டிப் பழுத்தாலுமதை யுண்ணலாமா—நாம்
எடுத்த சுமையதனைச் சுமந்தல்லோ தீரவேண்டும்
எட்டாக்கனிக்கே கொட்டாவி விடலாமா (பாழா) 7

தலை விதியைதடுத்து விடலாமா—[illegible]
தலை யிருக்கவும் வாலாட்டலாமா—பின்னுந்
தவளை தண்ணீர்க்கிழுக்க ஓந்தி கரைக்கிழுக்கத்
தானேவந்த சீதேவியைத் தள்ளலாமா (பாழா) 8

எலிக்கு மணியமதைத் தரலாமா—அந்த
எலிக்குப் பயந்து வீட்டைச் சுடலாமா—நீ
என்னடா கெடுவதென்று யின்னமும் நான் கெட்டுப் போவேன்
என்னபந்தய மென்றுரை செய்யலாமா (பாழா) 9

நானென்ற ஆணவமதைக் கொள்ளலாமா—ஐயோ
நல்லோரை நாவழிந்திடச் சொல்லலாமா—முன்னம் [காணோம்
நாயைக் கண்டால் கல்லைக்காணோம் கல்லைக்கண்டால் நாயைக்
நானென்ன செய்வேனென்றுரை செய்யலாமா (பாழா) 10

வீட்டு விளக்கென்று முத்தமிடலாமா—கெட்ட
வீணருக்கு ஞாயம்சொல்லக்கூடலாமா—பொழுது

விடிய விடியக்கதைக் கேட்டுஞ் சீதை ராமனுக்கு
விவாக முறை யென்னவென்றுங் கேட்கலாமா (பாழா) 11
முன்னோர் சொன்ன மொழியெல்லாம் பின்னமாமா—குடியற்
முழுமோசக்காரருக்கு ஞாயமாமா—நாமள்
முழுச்சுக் கொண்டோம் முடுச்சு பழுச்சென்று போட்டதினால்
முஹையதீனப்துல் காதர் மொழியைத் தள்ளப்போமா(பாழா) 12

---

## அன்னியர்கள் சபதம் முடித்ததைப் பாருங்கள்.

(3) கோச்சிமலை குடகுமலை—என்ற மெட்டு குறம்.

காலக்கியான மென்னும் சண்டமாருதமே காக்ஷி
அதற்கு—காந்தியே யத் தாக்ஷி
கை—ராட்டினமே சாக்ஷி — கட்டுங்
கதருடையே சுயநலத்தை கவருதற்குள் ளாக்ஷி 1
ஆலகால விஷத்தை யொத்ததாகும் மன்னியர் நேசம்
ஆட்டுத்—தோலால் வந்த தேசம்
அது—தானே நம் மதி மோசம்—இன்னு
மதிகமுண்டு மவர்கள்செய்தார்பாட்ட வட்ட காசம் 2
ஆடைக்குப் பதிலிலையுடுத்தி வகங் கொண்ட தோர் ஜாதி
நம்மா—லவர்க்கு வந்த கியாதி
இப்போ—தவர் நமக்கே வாதி — அதி
னால் நமது காந்தியின் முன்னறிக்கையே நன் னீதி 3
சீப்போடு கண்ணாடியும் நம் சிறுவர்கட்குப் பொம்மை
விற்று—ஜீ வித்திட நம்மை
வந்து—சேர்ந்திக்கரையிற் செம்மை-பெற்றித்
தேசமதை மோசமதாய்ச் சேகரித்தது உண்மை 4
கடர்க்கரையில் மீன் பிடிக்கும் காவரைப்போல் வாடி
நவாப்—காலத்தில் மன் ரூடி
மண்டிக்—காலாளர்க்குள் ளோடி — மன
கவலையுற்று நடத்திட்டமுன் கருத்தையிப்போக் கூடி.

வெள்ளையர் நம்மிடஞ் சபதப்வைத்தது மூன் றுண்டு
அதில்—வண்டியிழுப்ப தொண்டு
மலம்—வாருவது இரண்டு—மூன்று
வது விளக்கை தலையிலேற்றி வைப்பதெனப் பண்டு 6

அவர்க ளெண்ணப்படி முடியலாச்சு நம்முன் னாலே
அதி—னாலே நாமிக் காலே
காந்தி—யறிவித்ததைப் போலே — வை
ராக்கியங்கொண்டேக்கத்தை யனுசரிப்போமொற்றுமையாலே 7

சன்னஞ்சன்னமாய் மதிப்புச்சார்ந்ததினா லப்போ
நம்மைத்—தாக்குகின்று ரிப்போ
ஒற்றுச்—சாதிப்பது மெய்ப்போ—மிகு
சாந்தமுள்ள காந்திமஹான் ஓர்ந்துரைப்பதுங் கைப்போ 8

கொஞ்ச மல்ல வவர்கள் செய்தக் கோரம் பெருங் கொடுமை
அதைச்—கூறவென்றால் கடுமை
தோட்டக்—கூலிக்கா நா படிமைப்—படக்
குவலயத்தி லவர்களின்னுங் கூறுவதே கெடுமை

நம்மவர்க்குக் கொஞ்சங்கூட நன்மை தெரிய வில்லை-
அதி—னாலன்னியர் சொல்லைக்
கேட்டு—நடந்துபட்டோந் தொல்லை — இனி
நாமதர்க்கு ஒற்றுமையாய் நடப்பதே நல் எல்லை 10

கவிக்கடலா முஹையதீ னப்துல்காதருரை வாக்கியம்
ஜீவ—காருண்ணிய சிலாக்கியம்
இதனைக்—கருதிட நல் யோக்கியம்-என்றுங்
கைகூடி வாழ்விக்கும் நற் காரண சௌ பாக்கியம் 11

---

(4) பலூன் பாட்டு:—நோட்டு விருத்தம்.

ஊரறிய நாடகங்க ளேகமாச்சு
உள்ள பெரியாக்டர்கள் பேர்கள் போச்சு
நேரறிய உள்ள பெயர் பிரலாச்சு
நிகரற்ற வாக்டர்கள் பெண்க ளாச்சு

சீரறியதெம்மாங்கு பார்க்க லாச்சு
தேவாரந் திருப்புகளை மறந்து போச்சு
தாரறிய பித்தளை டாலராச்சு
சங்கீத சுரஞான மோடிப்போச்சு.

(5) தானன்ன நானன்ன நானன்னன்னு தன்னு
நானன்ன தானன்னு நானன்னன்னு
கந்தா குகா முருகா வந்தாளரி மருகா
சந்தாரனே ஞாயமா சிவ சண்முகா
1. நந்தத்திற்கே நேயமா
ஆண் ராஜா போய் பெண்கள்தான் ராஜா வாய் டிராமா
தேன்பாட லாயாச்சுதே நாட்டைச்சுற்றுமல்
2. யேன்பாடெல்லாம் போச்சுதே

துட்டுக்கோ ராக்டர்கள் பொட்டிட்டு பட்டிட்டு
செட்டுச் செட்டாய் கிளம்புறார் தெம்மாங்கு கெஜல்
3. மெட்டு மெட்டாய் விளம்புறார்

பித்தளை யால் மெடலும் கத்தாளை நாருடலும்
எத்தால் வந்த யோக்கியம் அவர் பிரிதிஷ்
4. டத்தார் தந்த பாக்கியம்

கத்தத்துக்குங் கழுதைச் சத்தத்துக்குஞ் சொல்லா
சுத்தந்துக்கும் பித்தமா ஒன்சுமோர் பிளீஸ்
5. நித்தியம் நித்தியம் சத்தமா
காலுக்குமே பெண்கள் சேலுக்குமே சிகப்பு
மேலுக்குமே மயங்குறார் பவுடர் செய்யும்
6. மாலுக்குள்ளே தியங்குறார்
போக்கத்த வாட்டந்தை ஊக்கத்துடன் காணா
தூக்கத்தையும் கெடுக்கிறார் அம்மாதர் மய்ய
7. லேக்கத்திலே நடக்குறார்
தில்லாடப்பாம்பாட எல்லாம் கரம்போட
நல்லா யினிப்பாகுதோ சங்கீதசுரம்
8. இல்லாமலும் போகுதோ

ஊரெங்கினும் தாசர் பேரெங்கினுமாக
சாரெங்கம் போற் றிரிகிறார் சந்துக்குச் சந்து
9. தாராங்கம் போற் பெருகிறார்

வித்தாரமாய் கவியை முத்தாரம் போலிசைத்து
வைத்தோர் கட்கே சிறப்பு களவாண்டுக்கவி
10. வித்தோர்களே செருப்பு

இத்தரையில் முஹையதீ னப்துல் காதர் வாக்கை
உத்தாரமாய்க் காட்டுவோம் எத்திசையும்
11, வித்தாரமாய் நாட்டுவோம் (தானன்ன)

---

## மதுரை சிச்சா சாஹிப்பவர்கள் சந்தனக்கடை.

(6) அறுசீறடி யாசிறிய விருத்தம்.

சீருலவு மாமதுரை நகர்வாழுந் தீனின்குலத் திலக னேபப்
பேருலவு சிச்சா சாகிபு பெற்ற அப்துலஜீஸ் பேரோ னென்றிப்
பாருலவு மிகுமணமே நிரைசந்தன க்கடையின் பண்புதன்னை
நாருலவு சேடனுமே பகர முடி யாதெனில் நாம் நவில்வதென்னோ

(7) பச்சமலே பவளமலே என்ற மெட்டு, குறம்.

கண்ணிகள்.

அச்சா பலே பேஷ் சபாஷ் நம் சிச்சாகடை நேரு
சந்த—ணதித்தைலஞ் சீரு
அதை—வாங்கிப் பூசிப் பாரு—சற்று
ஆனதின் பின் பார்க்க நமக்கது கொடுக்கும் ஜோரு 1

லெக்ஷாதிப் பிரபுக்களு நல்லிச்சையுற்று மகிழ்வார்
அப்துல்—அஜீசைத் தேடி வருவார்
அவர்—கையிற் காசைத் தருவார்— அவ
ராலுயர்ந்த சந்தனத்தை யரைத்துக் கரத்திற் பெருவார் 2

அத்தரோடு புனுகு சவ்வாதப் போதைக் கப்போ கிடைக்கும்
நிரேகத்—தசிங்கங்களை யெடுக்கும்
நமக்—காசையைத்தினங் கொடுக்கும்-இன்னு
மதாவன்றி நூற்றைம்பது வாசனையு மதிற் றெடுக்கும் 3

மனோரஞ்சிதக் கதம்பங் கஸ்தூரி வாசனைப்பௌடர் செண்டு
போலி—மார்க்குகளை விட் டகன்று
புலி—மார்க்கிதனைக் கண்டு—நாமவள்
வாங்கிடுவோ மிதைப்போலிந்த வையகத்தெங் குண்டு 4
சுத்தமுள்ள மேறுபன்னீர் சுவாது பச்சைக்கற் பூரம்
அரக்—கஜாவுமம்பர் சாரம்
குங்கு—மப்பூ வார வாரம்—இதைச்
சோக்காகச்சேர்க்கும் போது பார்க்க வலங் காரம் 5
ஸ்நானப் பௌடர் சந்தனப்பௌடர் தசாங்கம் ரோஜாக்குல் கந்து
தனக்—காகத் துலையிலி ருந்து
சிச்சா—சாகிபுக் கடைக்கு வந்து—நோட்டீஸ்
சாந்தின்படி சாக்கைப் பெற்றுப் போவார்கள் விலை தந்து 6
உம்பர் மகிழ் கின்ற தொரு அம்பர் ஊது வத்தி
சிச்சா—சேர்க்கையின் னூற் பத்தி
மணம்—ஒரு மயில் வரை சுத்தி – வீசும்
ஊருக்கெல்லாந்தெரியு மாதிமுத லிதுதானூற் பத்தி 7
ஒவ்வொன்றினும் பலவிதமாயுண்டு வாசனை வில்லை
இதற்—குண்டோ யிங்கிணை யில்லை
நம்பு – முறுதியாக வென் சொல்லை—வாங்கி
ஓர்மையாக நாமணிந்தா லுயர்ந்திடு நம் மெல்லை 8
ஆதிமுதலிது வரை சிச்சா சாகிபு கடையாசு
விலை – யானதோ சல்லீசு
அவர்—மைந்த னப்துல் அஜீசு—நல்லோ
ரானதினாற் சொன்னேன் முறைபதினப்துல்காதர் சொற்பேசு 9

———

(8) மூர்த்தியாய் வந்துதித்த—என்ற மெட்டு

பல்லவி

சிச்சா கடைச்சந்தன நற் சேர்க்கையின் குணமே
குணமே குணமே குணமே 1

அநுபல்லவி

அச்சா பலே பேஷ் சபாஷென் றவனியிலுள்ளவர்கள்
மெச்சத்தகுந்திட்டதோர் மேலாம் புலி மார்க்கே
மார்க்கே மார்க்கே மார்க்கே 2
பாம்பே சிங்கப்பூர் சைனு பார்ஸி லண்டன் சீமை முதல்
தாம்புகழும் மதுரை சிச்சா சாகிபு சந்தனம்
சந்தனம் சந்தனம் சந்தனம்

ஜப்பானயர்லாந்து டில்லி ஜெர்மென் சைனு மேல்மென்வரை
ஒப்பாதோர் பாக்கி யில்லே உண்மையின் சொல்லே
சொல்லே சொல்லே சொல்லே 4
மதராஸ் கொளும்பு ரெங்கூன் மார்க்கம் யாழ்ப்பாண மெங்கும்
சதமாய் விளங்கும் சிச்சா செளக்காரின் பேரு
பேரு பேரு பேரு 5
ராஜ ராஜாக்கள் பல ஜமீன் மிட்டாதார்கள் மிக்க
பூஜா பல மெனவே புகள்வார்கள் பேசி
பேசி பேசி பேசி 6
எந்தக்கலியாணத்திலும் ஏக போக பஜனையிலும்
விந்தையா யனுபவிக்க வேண்டிய சந்தனம்
சந்தனம் சந்தனம் சந்தனம் 7
கோடான கோடிப் பேய்கள் புரட்டாசிக் கொலுவில் வந்து
ஆடாத ஆட்ட மாடி யது சொல்லும் பாட்டு
பாட்டு பாட்டு பாட்டு 8
வாடாத மணங்கொடுக்கும் மதுரை சிச்சா சந்தனங்கேட்டு
ஈடாக வாங்கி யீந்தா லெடுத்திடு மோட்டம்
ஓட்டம் ஓட்டம் ஓட்டம்
மிதமாயிருக்கு மெனில் மேன்மையுறு மோகவனி 9
இதமாய் நம்மிந்தியர்க்கு ஏற்றதோர் வாசம்
வாசம் வாசம் வாசம் 10
நன்னய மெடல்களுடன் நற்சாக்ஷிப் பத்திரம் பெற்ற
மன்னராம் மதுரை சிச்சாசாயபு பேரு
பேரு பேரு பேரு 11
அன்னவரி னருமை புத்திரர் அப்துல் அஜீச வரை
என்னேரமும் நாமும் பாடி ஏற்றுவோம் போற்றி
போற்றி போற்றி போற்றி 12
தானதருமத் திற்சிறந்த சாத்மீக மதைக் கைக்கொண்ட
ஞான சம்பன்னருன அப்துலஜீசு
அஜீசு அஜீசு அஜீசு 13
தங்கத்தால் மெடலொன்று தந்திருக்கிறதாக நன்று
சங்கத்தாரறிய சலாம் போட்டிருக்கும் சலாம்
சலாம் சலாம் சலாம் 14
மாமதுர முஹையதீன் அப்துல்காதர் புகழ்ந்தோதுங் கடை
மாமதுரைக் கீழச் சித்திரை வீதியின் ரோடு
ரோடு ரோடு ரோடு 15

முற்றுப்பெற்றது.

இதன் இரண்டாம் பாகத்தை வாங்கிப்பார்க்கத் தவறாதீர்கள்.

ஸ்ரீ நடனகோபால் பிரஸ், மதுரை 28-2000.